செய்தி வெளியீடு எண்: 20 நாள்:09.05.2021

<u>செய்திக் குறிப்பு</u>

**<u>தமிழ்நாட்டில் நாளை முதல் 14 நாட்களுக்கு முழு ஊரடங்கு–</u>**
**<u>நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த ஊரடங்கின் போது</u>**
**<u>ஒத்துழைப்பு கோரி மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின்</u>**
**<u>தொழில்வணிக அமைப்பினருடன் கலந்தாலோசனை</u>**

கோவிட் பெருந்தொற்று முழு ஊரடங்கு தொடர்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், இன்று (9–5–2021), தலைமைச் செயலகத்தில் தொழில் மற்றும் வணிகச் சங்கத்தினர்களுடன் கலந்தாலோசனை மேற்கொண்டார். இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள், தொழில் மற்றும் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், கோவிட் பெருந்தொற்றிலிருந்து மக்களின் உயிர்களைப் பேணிக் காத்திடவும், பெருந்தொற்றின் தொடர் பரவல் சங்கிலியை முறித்திடவும், அரசு எடுத்துவரும் போர்க்கால நடவடிக்கைகளை எடுத்துரைத்தார். தனது தொடக்க உரையிலேயே, இந்தக் கூட்டத்தை ஊரடங்கு அறிவிப்பதற்கு முன்பே நடத்தியிருக்க வேண்டும். பதவியேற்ற குறுகியகாலத்தில், அறிவிக்க வேண்டிய சூழல் உருவாகியதால் உங்களை அழைத்துப் பேசி அறிவிக்க முடியவில்லை என்றாலும், வரும் காலங்களில் நிச்சயம் உங்களை கலந்தாலோசித்த பிறகு, அறிவிக்கப்படும் என உறுதி அளித்தார். அதைத் தொடர்ந்து, மே மாதம் 10 ஆம் தேதி முதல் 24 ஆம் தேதி வரை முழு ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட உள்ளது என்றும், இதற்கு தொழில் மற்றும் வர்த்தக சங்கங்கள் முழு ஒத்துழைப்பை நல்கிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தொழில் மற்றும் வர்த்தகச் சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை எடுத்துரைத்து தமிழக அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளைப் பாராட்டி, முழு ஒத்துழைப்பு நல்குவதாக தெரிவித்தன.

தொற்றுப் பரவலை வெகுவாகக் கட்டுப்படுத்தி, மக்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாப்பதே, அரசின் தலையாய குறிக்கோள் என்றும், இந்தப் பெருந்தொற்றின் தொடர் பரவல் சங்கிலியை முறித்து, இந்தத் தொற்றின் பாதிப்பினை வெகுவாக குறைத்திட வேண்டும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். விலக்களிக்கப்பட்ட தொழிற் சாலைகளும், வர்த்தக அமைப்புகளும், அனைத்து கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகளையும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும், மேற்படி ஆலோசனைக் கூட்டத்தில், தொழில் மற்றும் வணிக அமைப்புகள் சார்பாக தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் கோரிக்கைகளை பரிசீலித்து அவற்றின் மீது உரிய முடிவுகள் நாளை அறிவிக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு தங்கம் தென்னரசு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறைஅமைச்சர் திரு.தா.மோ. அன்பரசன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

***

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**